மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
வலங்கைமான்.

**முன்னிலை :– திரு. P. ஜேசுபாலன், M. A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
வலங்கைமான்.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் நாள் திங்கள்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 133/2025**

**குற்ற எண். 188/2018**

**CNR No. TNTV09-000142-2025**

தமிழ்நாடு அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
வலங்கைமான் காவல் நிலையம்,
திருவாரூர் மாவட்டம். ... குற்றமுறையீட்டாளர்.

// எதிர்//

**A1. ராமச்சந்திரன் வயது 41/2026**
த/பெ. கோவிந்தன்,
நாகமங்கலம், மணலூர்,
வலங்கைமான் தாலுக்கா
திருவாரூர் மாவட்டம்

**A2. லோகநாதன், வயது 41/2026**
த/பெ.மாரிமுத்து,
வெள்ளைத்திடல், நாகமங்கலம்
வலங்கைமான் தாலுக்கா
திருவாரூர் மாவட்டம் ... எதிரிகள்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:31:20 +0530

**2019 ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிகள், விதி 106 ன் கீழ் படியான விபரங்கள்**

| Sl. No. | Name of the Complaint | Name of the accused | | Date of Arrest | Date of Release |
|---|---|---|---|---|---|
| (i) | State Rep. By The Inspector of Police, Valangaiman., | **A1. Ramachandiran S/o Govindasamy**<br><br>**A2. Loganathan S/o Marimuthu** | | A1 and A2 Abscod Charge Sheet File | Surity Produce by Accused A1 and A2 26.03.2026 on |
| (ii) | Date of filling of the complainant/ final report in the court | **Filing of Complainant**<br>01.07.2018 | | **Taken on file**<br>25.09.2025 | |
| (iii) | Date of committal of the cases to the court of sessions | | | : | Nil |
| (iv) | Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 as the case may be | | | : | 18.02.2026 |
| (v) | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the code. | **Crl.M.P.No.** | | **Date of filing** | **Result** |
| | **Nil** | **Nil** | | **Nil** | **Nil** |
| (vi) | Date of Examination in Chief and Cross | **Name of the Examination** | | **Date of Chief** | **Date of Cross** |
| | P.W.1 | Selvarani | | 16.03.2026 | …. |
| | P.W.2 | Keerthi | | 16.03.2026 | …. |
| | P.W.3 | Manimegalai | | 16.03.2026 | .... |
| | P.W.4 | Murugan | | 25.03.2026 | 25.03.2026 |

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.30 15:31:29 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| (vii) | Date of examination of the accused U/s. 313 of the Code | | | 26.03.2026 |
| (viii) | Details of abscondence of an accused and his appearance/Production as the case may be: | | | Nil |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | Sessions Court CMP No. | High Court No. and Date of stay | Result |
| | Nil | Nil | Nil | Nil |

| | | |
|---|---|---|
| **முதலாவதாக** | | U/s. 448 இதச ன்படி வலங்கைமான் காவல் சரகம் சேத்தமங்கலம் மெயின்ரோட்டை சேர்நத இவ்வழக்கின் 1 வது எதிரி எற்கனவே உள்ள முன் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு 2 வது எதிரியின் துண்டுதலின் பேரில் அத்துமீறி புகார்தாரரின் வீட்டிற்குள் புகுந்த குற்றம் |
| **இரண்டாவதாக** | | U/s. 294(b) இதச ன்படி, மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக அதே நாள் அதே நேரம், வீட்டிற்குள் புகுந்த எதிரிகள் புகார்தாரரை காமகுரோதமாக திட்டிய குற்றம் |
| **மூன்றாவதாக** | | U/s. 506(1)–ன் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக அதே நாள் அதே நேரம், எதிரிகள் புகார்தாரரிடம் உன் மகன்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிய குற்றம் |
| **நான்காவதாக** | | U/s TNPHW 4–ன் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக அதே நாள் அதே நேரம் புகார்தாரரின் புடவையை பிடித்து இழுத்து அவமானப்படுத்திய |
| எதிரிகளின் பதில்கள் | | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | | 1 மற்றும் 2 எதிரிகளின் மீதான 294(b),448, 506(1) இதச மற்றும் 4 TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:31:35 +0530

| | | |
|---|---|---|
| தண்டனை அல்லது உத்தரவு | | எதிரிகள் மீதான வழக்கை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கவில்லை என தீர்மானித்து, இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 294(b),448, 506(1) இதச மற்றும் 4 TNPHW Act-ன் கீழ் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நீரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளின் கீழ் இவ்வழக்கின் எதிரிகள் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை குவிமுச 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இன்று 26.03.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை-1 திரு. இளஞ்செழியன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் C. செல்வராசு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் இன்று (30.03.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## <u>தீர்ப்புரை</u>

1. <u>அரசுத்தரப்பு வழக்கு:</u>

அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றயிறுதி அறிக்கையில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு,

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:31:43 +0530

வலங்கைமான் காவல் சரகம் சேத்தமங்கலம் மெயின்ரோட்டை சேர்நத இவ்வழக்கின் 1 வது எதிரி எற்கனவே உள்ள முன் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு 2 வது எதிரி துண்டுதலின் பேரில் அத்துமீறி புகார்தாரரின் வீட்டிற்குள் புகுந்து புகார்தாரரை காமகுரோதமாக திட்டியும், புகார்தாரரின் புடவையை பிடித்து இழுத்து அவமானப்படுத்தியும், உன் மகன்களை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டி குற்ற செயல் புரிந்துள்ளார்கள் எனவே 1 மற்றும் 2 எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவு 294(b),448, 506(1)இதச மற்றும் 4 TNPHW Act–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட விவரம்:</u>**

குவிமுச பிரிவு 173(2) ன் கீழ் இவ்வழக்கின் குற்றயிறுதி அறிக்கை வலங்கைமான் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் கடந்த 01.07.2018–ம் தேதியன்று 1 மற்றும் 2 எதிரிகளின் மீது 294(b),448, 506(1)இதச மற்றும் 4 TNPHW Act–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றயிறுதி அறிக்கையானது கடந்த 25.09.2025 தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு குவிமுச பிரிவின் 204–ன் கீழ் எதிரிக்கு சம்மன் அனுப்பட்டது.

**3. <u>குவிமுச பிரிவு 207 ன் கீழ் நகல் வழங்கப்பட்டத்தின் விவரம் :</u>**

எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் அவருக்கு குவிமுச 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:31:50 +0530

**4. <u>எதிரிகளின் மீது வனைப்பட்ட குற்றச்சாட்டுகளின் விவரம்:</u>**

**4.1.** எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு, இருதரப்பு வாதங்களையும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, 1 மற்றும் 2 எதிரிகளின் மீது 294(b),448, 506(1)இதச மற்றும் 4 TNPHW Act–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.2.** மேற்படி குற்றச்சாட்டுகளை எதிரிகளிடம் விளக்கி வினவியபோது எதிரிகள் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தனர். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**5. <u>அரசுத்தரப்பு சாட்சியம்:</u>**

அரசுதரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. <u>அரசுத்தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**6.1. அ.சா.1 செல்வராணி** தனது சாட்சியத்தில் தான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும், தனது பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் தனக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை எனவும், தான் திருவிழாவின்போது கூட்ட நெரிசலில் கால் தவறி கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார்மனுவில்

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.30 15:31:56 +0530

உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள விபரங்கள் பற்றி தனக்கு தெரியாது என்றும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது என்றும், போலீசார் விசாரணையில் மேற்சொன்னவாறுதான் கூறினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காத காரணத்தினால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**6.2. அ.சா.2 கீர்த்தி** தனது சாட்சியத்தில், தான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருவதாகவும், அ.சா.1 ஐ தெரியும் என்றும், தனது பக்கத்து வீட்டுக்காரர் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தனது ஊர்க்காரர்கள் ஆவார்கள் எனவும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது. என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காத காரணத்தினால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**6.3. அ.சா.3 மணிமேகலை** தனது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தனது ஊர்காரர்கள் எனவும், இவ்வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், சுமார் 7 வருடங்களுக்கு முன்பு தான் தனது வேலையை முடித்துவிட்டு வந்து கொண்டிருந்தபோது போலீசார் கேட்டதன் பேரில்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:32:03 +0530

கையொப்பம் செய்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது அல்ல எனவும், அதிலுள்ள விபரம் பற்றி தெரியாது என்றும், போலிசார் தன்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காத காரணத்தினால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**6.4. அ.சா.4. முருகன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளுக்கு எதிராகவும் சாட்சியம் அளித்துள்ளதாலும் இவ்வழக்கின் காலதாமதம் மற்றும் நீதியின் நலன் கருதி சட்டப்பிரிவு 311 குவிமுச மற்றும் ச/பி.348 BNSS ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் தான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், இவ்வழக்கின் விசாரணை அதிகாரி மற்றும் புலன் விசாரணை அதிகாரிகளான திரு. கோவிந்தராஜன் மற்றும் திருமதி.மஞ்சுளா ஆகியோர்களுடைய கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 01.07.2018 ம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு வலங்கைமான் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது வலங்கைமான் தாலுக்கா சோத்தமங்கலம் குடியான தெருவை சேர்ந்த பன்னீர்செல்வம் மனைவி செல்வராணி என்பவர் நிலையம் ஆஜராகி

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:32:08 +0530

கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 188/2018 ச/பி.294(b), 448, 506(1) இதச மற்றும் சட்டப்பிரிவு 4, தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், புகார் மனு **அ.த.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் அன்றைய தினமே காலை 08.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கணபதி மற்றும் மணிமேகலை ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், அவை முறையே **அ.த.சா.ஆ.5** மற்றும் **அ.த.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் கீர்த்தி, ராஜேந்திரன் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் கணபதி மற்றும் மணிமேகலை ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இத்துடன் அவருடைய புலன் விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக தலைமறைவு குற்றவாளிகளாக கருதி ச/பி. 294(b), 448, 506(i) இதச மற்றும் சட்டப்பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அவருடைய விசாரணையில் அனைத்து சாட்சிகளும் வழக்கு சம்பவத்தை பற்றி கூறியுள்ளனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:32:15 +0530

**7. <u>குவிமுச பிரிவு 313(1) (b) ன் படியான விசாரணை:</u>**

இவ்வழக்கில் அரசுத்தரப்பால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச 313 (b) (1) ன் கீழ் எதிரிகளிடம் வினவிய போது எதிரிகளிடம் மேற்படி சாட்சிகளின் சாட்சியம் பொய் என்று மறுத்துரைத்தனர். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எதுவும் இல்லை என்று தெரிவித்தனர் .

**8. <u>எதிரிகள் தரப்பு வழக்கு:</u>**

எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றும் எதிரிகள் தான் குற்றத்தை செய்தார் என்று நிருப்பிக்க சாட்சியம் எதுவும் இல்லை என்பது எதிரிகள் தரப்பு வாதமாகும். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை ஆவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**9. <u>தீர்வுக்குறிய பிரச்சினை:</u>**

i) எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டினை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பித்துள்ளதா?

ii) அவ்வாறு குற்றம் நிருப்பிக்கப்பட்டிருப்பின் எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய தண்டனையின் விபரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வு குரிய பிரச்சினையாகும்.

**10. <u>தீர்வு:</u>**

**10.1.** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலனை

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:32:24 +0530

செய்யப்பட்டது. அரசுத்தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.4** வரையிலான சாட்சிகளின் சாட்சியம் மற்றும் **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்களின் மூலம் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிருப்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஆகையால் எதிரிகளை குற்றவாளி என தீர்மானித்து தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது. எதிரிகள் தரப்பில் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்படவில்லை என்றும், எதிரிகளை குற்றச்சம்பவத்தோடு தொடர்பு படுத்தும் விதத்தில் எவ்வித சாட்சியமும் இல்லை என்றும், எனவே, எதிரிகள் குற்றவாளி இல்லை என தீர்மானித்து இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பு வழங்குமாறு வாதிடப்பட்டது.

**10.2.** அரசுத்தரப்பால் மேற்படி எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும் பொருட்டு **அ.சா.1** முதல் **அ.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.6** சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வலங்கைமான் காவல் சரகம் சேத்தமங்கலம் மெயின்ரோட்டை சேர்ந்த இவ்வழக்கின் 1 வது எதிரி எற்கனவே உள்ள முன் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு 2 வது எதிரி துண்டுதலின் பேரில் அத்துமீறி புகார்தாரரின் வீட்டிற்குள் புகுந்து புகார்தாரரை காமகுரோதமாக திட்டியும், புகார்தாரரின் புடவையை பிடித்து இழுத்து அவமானப்படுத்தியும், உன் மகன்களை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டி குற்ற செயல் புரிந்துள்ளார்கள் என்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10.3. புகார்தாரர் அ.சா.1** தனது முதல் விசாரணையில், "... ஆஜர் எதிரிகளுக்கும்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:32:33 +0530

எனக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை. நான் திருவிழாவின்போது கூட்ட நெரிசலில் கால் தவறி கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது......." என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ன் சாட்சியத்தில் ஆஜர் எதிரிக்கும் தனக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றும், புகார் மனுவில் உள்ள விபரங்கள் பற்றி தனக்கு தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி **அ,சா.1** அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். தன்னிடம் காட்டப்படும் சமரச மனுவில் உள்ள புகார்தாரர் சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சமரச மனு **அ.த.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகளை குற்றச்சம்பவத்தோடு தொடர்புபடுத்தும் விதத்தில் வேறு எந்த சாட்சியமும் அ.சா.1 அளிக்கவில்லை. எனவே, **அ.சா.1** ன் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு எந்த பயனும் தரவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.4. கண்ணுற்ற சாட்சியான அ.சா.2** தனது முதல் விசாரணையில், "... சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை....." என்று சாட்சியம்மளித்துள்ளார். சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததல் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி **அ,சா.2** அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். **அ.சா.2,** அரசு தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையிலும் அரசு தரப்பு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:32:39 +0530

வழக்கிற்கு பயனளிக்கும் வகையில் எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே, **அ.சா.2** ன் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு எந்த பயனும் தரவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.5. பார்வை மகசர் சாட்சியான அ.சா.3** தனது முதல் விசாரணையில் "....இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நான் எனது வேலையை முடித்துவிட்டு வந்து கொண்டிருந்தபோது போலீசார் கேட்டதன் பேரில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது அல்ல. அதிலுள்ள விபரம் பற்றி தெரியாது. போலிசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை....." என்று சாட்சியம் அளித்துள்ளார் **அ.சா.3** அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததல் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையிலும் அரசு தரப்பு வழக்கிற்கு பயனளிக்கும் வகையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே, **அ.சா.3** ன் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு எந்த பயனும் தரவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.6. புலன் விசாரணை அதிகாரி அ.சா.4** தனது முதல் விசாரணையில் "... நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளுக்கு எதிராகவும் சாட்சியம் அளித்துள்ளதாலும் இவ்வழக்கின் காலதாமதம் மற்றும் நீதியின் நலன் கருதி

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:32:46 +0530

சட்டப்பிரிவு 311 குவிமுச மற்றும் ச/பி.348 BNSS ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரி மற்றும் புலன் விசாரணை அதிகாரிகளான திரு. கோவிந்தராஜன் மற்றும் திருமதி.மஞ்சுளா ஆகியோர்களுடைய கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 01.07.2018 ம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு வலங்கைமான் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது வலங்கைமான் தாலுக்கா சோத்தமங்கலம் குடியான தெருவை சேர்ந்த பன்னீர்செல்வம் மனைவி செல்வராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 188/2018 ச/பி.294(b), 448, 506(1) இதச மற்றும் சட்டப்பிரிவு 4, தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். புகார் மனு **அ.த.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே காலை 08.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கணபதி மற்றும் மணிமேகலை ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் அவை முறையே **அ.த.சா.ஆ.5** மற்றும் **அ.த.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் கீர்த்தி, ராஜேந்திரன் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் கணபதி

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:32:52 +0530

மற்றும் மணிமேகலை ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் அவருடைய புலன் விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக தலைமறைவு குற்றவாளிகளாக கருதி ச/பி. 294(b), 448, 506(i) இதச மற்றும் சட்டப்பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அவருடைய விசாரணையில் அனைத்து சாட்சிகளும் வழக்கு சம்பவத்தை பற்றி கூறியுள்ளனர்....." என்று சாட்சியம் அளித்துள்ளார். **அ.சா.4** அவரது குறுக்கு விசாரணையில், "....விசாரணை அதிகாரி சொன்ன நாள் நேரத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை வழக்கு எதுவும் பதியப்படவில்லை என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு தேவையாண ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல......" என்று சாட்சியமளித்துள்ளார்.

**10.7.** மேற்படி, **அ.சா.1, முதல் அ.சா.3** வரை உள்ள அரசு தரப்பு சாட்சிகளின் நீதிமன்ற சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கிற்கு எந்தவித பயனும் அளிக்கவில்லை. இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆஜர் எதிரிகளை தெரியாது என்றும், புகார் மனுவில் உள்ள விபரங்கள் பற்றி தெரியாது என்றும், மேலும் மேற்படி சாட்சிகள் அரசு தரப்பால் செய்யப்பட்ட குறுக்கு

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.30 15:32:57 +0530

விசாரணையிலும் அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரனையாக சங்கதிகள் எதுவும் கூறவில்லை. எனவே, மேற்படி **அ.சா.1, முதல் அ.சா.3** வரை உள்ள அரசு தரப்பு சாட்சிகளின் நீதிமன்ற சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கிற்கு எந்தவித பயனும் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் **அ.சா.4** இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். விசாரணை அதிகாரியின் சாட்சி என்பது தனித்துவமான உட்பொருள் கொண்ட சான்றாக அமையாது. அது விசாரணை நடைபெற்ற முறைமையை விளக்கும் துணை ஆதாரமாக மட்டுமே கருதப்படும். விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டுமே சார்ந்து எதிரி குற்றவாளி என முடிவு செய்ய இயலாது என இந்நீதிமன்ற கருதுகிறது. எதிரி குற்ற செயலில் ஈடுப்பட்டார் என்ற முடிவுக்கு வர புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியம் மட்டுமே போதாது. மேலும் அதனை ஆதரிக்கும் மற்ற சுயாதீனமான அது அவர் விசாரணையில் சேகரித்த ஆதாரங்களின் பதிவேட்டாக மட்டுமே அமையும். இவ்வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட குறிப்புகள் சாட்சிகள் பிற உட்சான்றுகள் உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே இந்நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும், இவ்வழக்கில் **அ.சா.1 முதல் 3** சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறியதால் மேற்படி **அ.சா.4** ன் சாட்சியமும் அவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தடய பொருள் எதிரிக்கு எதிராக எவ்வித குற்ற அனுமானத்தையும் ஏற்படுத்தாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அரசு தரப்பு சாட்சியங்களை முழுமையாக பரிசீலனை செய்த வகையில் சாட்சிகள் யாரும் எதிரியை குற்றச்சம்பவத்தொடு தொடர்புபடுத்தி சாட்சியம்

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.30 15:33:03 +0530

அளிக்கவில்லை **அ.சா.1, முதல் அ.சா.3** அரசுத்தரப்பு வழக்கை அனுசரிக்காதக் காரணத்தினாலும், சாட்சிகள் யாரும் எதிரி குற்ற செயலில் இடுப்பட்டார் என்று அரசு தரப்பு வழக்கிற்க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதால், 1 மற்றும் 2 எதிரிகளின் மீதான 294(b),448, 506(1)இதச மற்றும் 4 TNPHW Act–ன் கீழ் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

**11. முடிவு:**

முடிவாக, எதிரிகள் மீதான வழக்கை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கவில்லை என தீர்மானித்து, இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 294(b),448, 506(1) இதச மற்றும் 4 TNPHW Act–ன் கீழ் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நீரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளின் கீழ் இவ்வழக்கின் எதிரிகள் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை குவிமுச 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் தேதி திங்கள்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:33:09 +0530

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:33:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**இணைப்பு**

**சாட்சிகளின் விபரம்**

**அரசுதரப்பு சாட்சிகள்**

| **தரவரிசை** | **பெயர்** | **வகை** |
|---|---|---|
| அ.சா.1 | செல்வராணி | புகார்தாரர் |
| அ.சா.2 | கீர்த்தி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | மணிமேகலை | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.4 | முருகன் | புலன் விசாரணை அதிகாரி |

**எதிரிகள் தரப்பு சாட்சி – இல்லை**

**நீதிமன்ற சாட்சி – இல்லை**

**சான்றாவணங்களின் விபரம்**

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்** | **சான்றாவண எண்.** | **விபரம்** |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ. 1/அ.சா. 1 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| 2. | அ.த.சா.ஆ.2/அ.சா.1 | சமரச மனுவில் உள்ள அ.சா.1ன் சாட்சி கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ. 3/அ.சா.4 | புகார் மனு |
| 4. | அ.சா.ஆ. 4/அ.சா.4 | முதல் தகவல் அறிக்கை |
| 5. | அ.சா.ஆ. 5/ அ.சா.4 | பார்வை மகசர் |
| 6. | அ.சா.ஆ. 6/ அ.சா.4 | வரைபடம் |

**எதிரி தரப்பு சான்றாவணம் –இல்லை**
**நீதிமன்ற சான்றாவணம் – இல்லை**

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 15:33:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**<u>தீர்ப்புரையின் நகல் :</u>**

1. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

**<u>குறிப்பு</u>**

1. இவ்வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற விசாரணையின் போது பிணையில் இருந்தனர்.
3. சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.